
# யாருமற்ற தீவினிலே

கவிதை தொகுப்பு



வயவையூர் கை. சீதாராமன்

# யாருமற்ற தீவினிலே

*(கவிதைத் தொகுப்பு)*

வயவையூர் கை.சீதாராமன்

தாயுமானவன் வெளியீடு

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | யாருமற்ற தீவினிலே |
| ஆக்கியோன் | :- | வயவையூர் கை. சீதாராமன் |
| பதிப்புரிமை | :- | திருமதி. லலிதாராணி சீதாராமன் |
| வெளியீடு | :- | தாயுமானவன் வெளியீட்டகம் |
| கருத்தோவியம் | :- | ஓவியர் சண் |
| அட்டைப்படம் | :- | ஓவியர் சண் |
| கணணி வரைகலை | :- | கலைஞன் கிராபிக்ஸ் |
| அச்சுப்பதிப்பு | :- | குரு பிறிண்டேஸ், திருநெல்வேலி. |
| விலை | :- | **250 /=** |

| | | |
|---|---|---|
| Name of the Book | :- | Yarumatra Theevinile |
| Author | :- | Vayavaiyoor K. Seetharaman |
| Copy Right | :- | Mrs. Lalitharani Seetharaman |
| Publishers | :- | Thaayumanavan Publication |
| Cover Design | :- | Artist Shan |
| Graphics Design | :- | Kalaignan Graphics |
| Printed By | :- | Guru Printers, Thirunelvely. |
| Price Rs. | :- | **250 /=** |

# சமர்ப்பணம்



நான்
ஒன்பது வயது
சிறுவனாக இருந்த போதே
"ஊரைப்பற்றி கட்டுரை எழுது"
என்று
பேனாவைத் திணித்து
என்னை
படைப்பாளியாக்கிய
எனது
சிறிய தந்தையார்
நாடறிந்த கலைஞர்
**அமரர் வீ.எம்.குகராஜா**
அவர்களுக்கு இந்நூல்
சமர்ப்பணம்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அணிந்துரை | vi - viii |
| வாழ்த்துரை | ix - x |
| நயப்புரை | xi |
| களிப்புரை | xii |
| விளிப்புரை | xiii |
| என்னுரை | xiv |
| **அன்பியல் வரிகள்** | **01** |
| 1. யாருமற்ற தீவினிலே | 02 - 03 |
| 2. உலகம் உருண்டையடி | 04 - 07 |
| 3. என்காதல் | 08 - 09 |
| 4. காத்திருந்த காதல் | 10 - 11 |
| 5. இருவரும் வேறல்ல | 12 - 13 |
| 6. கனவெனவே ஆகட்டும் | 14 - 16 |
| 7. நான் ... நீ | 17 |
| 8. நாயகியே | 18 - 19 |
| 9. கனவு அல்ல | 20 |
| 10. சோகம் | 21 |
| 11.என்னவளே | 22 |
| **சமூகவியல் வரிகள்** | **23** |
| 12. என் மகனே | 24 - 25 |
| 13. வாழவிடுங்கள் | 26 - 28 |
| 14. காலம் பதில் சொல்லும் | 29 - 32 |
| 15. உணர்ந்துகொள் | 33 - 34 |
| 16. சிந்தித்து செயற்படுக | 35 - 38 |
| 17. வந்து பார் | 39 |
| 18. ஏக்கப் பெருமூச்சு | 40 - 42 |
| 19. உபதேசம் | 43 |

| | |
|---|---|
| 20. மனமே தளராதே | 44 - 45 |
| 21. சிகரம் தொடு | 46 |
| 22. முரண்பாடுகள் | 47 |
| 23. சூரியன் | 48 |
| 24. சுவடுகள் | 49 - 50 |
| 25. வானம் வசப்படும் | 51 |
| 26. சாதனைப் பயணம் | 52 |
| 27. தமிழா ! | 53 |
| 28. உறவுகள் | 54 |
| 29. புலராத பொழுதுகள் | 55 |
| 30. சொல்லின் பொருள் | 56 |
| 31. தாயே தெய்வம் | 57 |
| 32. என்நிலை | 58 |
| 33. விரைந்து வரும் | 59 |
| 34. அழுகை | 60 |
| 35. பெண்களே கண்கள் | 61 |
| 36. துயரங்களைக் கடந்து | 62 - 63 |
| **வாழ்த்தியல் வரிகள்** | **64** |
| 37. திருமண வாழ்த்து | 65 |
| 38. பிறந்தநாள் வாழ்த்து | 66 |
| 39. என் பொங்கல் | 67 |
| 40. நண்பா வாழ்க ! | 68 |
| 41. நத்தார் வாழ்த்து | 69 |
| 42. விரைந்தருள் தந்துடுவீர் | 70 |
| **நறுக்கியல் வரிகள்** | **71** |
| 43. கவிதை, பணம், ஆபத்து, மீசை | 72 |
| 44. ஆயுதம், பொறாமை, தயங்காதே | 73 |
| 45. என் உறவுகள், மறக்காதே, நிஜம் | 74 |
| 46. விடியல், இயலாமை, தடுமாறாதே | 75 |
| **47. என்னையும் ஏற்றிடுக** | 76 |

# அணிந்துரை

கவிதை நூலைக் கையில் எடுத்தேன். கவர்ச்சியான அட்டை கனதியில்லாத நூல். நூலை ஆக்கிய ஆசானை இந்த நூல் மூலம் அறிமுகமாகின்றேன். யார் இந்த தம்பி? பெயரைப் படித்தேன். அதிலும் ஒரு பெருமை, பெண்ணின் பெயருடன் ஆணின் பெயர் இணைந்தபெயர் ஆணின் பெயரை முன்னே வைத்துத்தானே பின்னே பெண்ணின் பெயர் வருவதுண்டு. ஆனால் இங்கே " சீதாராமன்" சீதையை முன்னிலைப் படுத்தும் பெயர். இராமர் திருமணம் என்று இல்லாமல் சீதா கல்யாணம் என்றுதானே பிரசங்கியாரும் பேசுகிறார். வள்ளுவனின் பெண்ணின் பெருந்தக்க யாவுள? என்ற கேள்விக்கு விடையாக இருக்குமோ? கவிதை நூல் என்று. நூலை எடுத்துப் படிக்கின்றேன்.

சீதை என்றுமே இராமனை ஏமாற்றவில்லை. ஆனால், நவயுகத்து சீதைகள் எப்படி இந்தப் புனிதமான இராமர்களை ஏமாற்றித் தாடியும், மீசையுமாகத் தவக்கோலத்தில் மாற்றிவிடுகிறார்கள். கோட்டில் வழக்கறிஞராக, நீதிபதியாகக் கடமையாற்றும் போது நான் கண்டு கேட்கும் காதல் வரலாற்றை தூக்கில் தொங்கிய பல ஆண்களின் உடல்களையும் அவர்களின் "பொக்கற்றில்" கிடந்த கடிதங்களையும், தம்பியின் கவிதைகளிலே முதல் பதினொரு பாடல்களும் படம்பிடித்துக் காட்டுகின்றன. காதலில் சிக்கி தன்னையே மறந்து· ஆறு அடிக் கயிற்றில் அடைக்கலம் புகும் தம்பியரைக் கண்டேனன்றித் தங்கையரைக் கண்டிலேன். இத்தனை அனுபவம் எனக்கு இந்த வயதில் வருவதற்கு நியாயமுண்டு. - இந்த வாலிபக் கவிஞனுக்கு, எப்படி இத்தனை அனுபவம், கவிஞனின் கற்பனையோ? காதலித்த அனுபவமோ? யானறியேன். அன்பியல் வரிகள் என்ற முதல் பதினொரு பாடல்களும் உள்ளத்தைத் தொட்டு நவயுகத்து நங்கையரின், உடுபுடவை மாறியது போல் காலத்தால் மாறிய அவர் காதலைக் கோடிட்டுக் காட்டுகின்றது. அடுத்து வருவது அவரது சமூகவியல் வரிகள் -

அடேயப்பா ! இந்தச் சிறுநூலின் இப்படியாக காலத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்ற கவித்திறனைப் பாராட்டாமல் இருக்கத்தான்

முடியுமா? மரபுக் கவிதை மேல் மோகம் கொண்டவன் யான். புதுக்கவிதை என்று புனையப்போய் கவிஞர்கள் கதை வசனத்தை எழுதும் இக்காலத்தில், மரபுக் கவிதையோடு புனிதமான புதுக்கவிதை வரிகள், பாரதியை, பாரதிதாசனையல்லவா நினைவூட்டுகின்றது. இவரது சமூகவியல் என்ற தலைப்பிலான இருபத்தைந்து கவிதைகளும் அற்புதமானவை. வீடுகள் தோறும் நடப்பவற்றை ஊர்கள்தோறும் அரங்கேறும் அவலங்களை அச்சொட்டாக கண்முன் நிறுத்தும் கவிதை வரிகள், அனைத்தும் பாராட்டப்படவேண்டியவை. மாபிள் போட்ட மாமனைக்குள் தன்னை பெற்றுவளர்த்த பெற்றோரை விட்டுவிட்டால், மொப்பர் கொண்டு துடைக்க வேண்டும் என்று, அவர்களை கோடிக்குள் கொட்டில் கட்டிவிடும் கொடுமையை சித்தரித்த பாங்கு மெய்சிலிர்க்க வைக்கின்றது. பெற்ற மனங்கள் முதுமையிலே பேதலித்துப் புலம்புவதும் "நவாலியூர் தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவரது ஆடுகதறும் பாங்கில்" நெஞ்சை இடித்து நிற்கின்றது. வன்னியால் வந்தவர்கள் படும்பாடு, வீடின்றி விளைநிலமும் இன்றி ஏன் வந்தோம்? வன்னியிலே செத்துத் தொலைந்திருக்கலாமே! என்ற ஆதங்கம், நாட்டு நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. அண்ணன் தம்பி உறவை அப்படியே படம் பிடித்துக்காட்டும் கவிதையை பாராட்டாமல் இருக்க முடியாது. எனது அரசியல் சித்தாந்தத்தை இக்கவிஞரும் கொண்டிருக்கின்றார் போலிருக்கின்றது. நாளொருமேனி பொழுதொரு வண்ணமாக நாட்டின் மண் பறிபோய், செத்துத் தொலைந்த தமிழர்கள் சாம்பல் மேட்டில் நிற்கின்றோம், இன்னுமா நாம் செத்துத்தொலைந்து சீர்கெட்டு வாழ்விழந்து முட்டிமோதி முழுவதுமாய் அழிவது? சமாதானக் கதவுகளைச் சாட்டேதும் சொல்லாமல் சரியாகத் திறக்க வேண்டும் என்ற கருத்து நம் தலைவர்களை எட்டும் நாள் எந்நாளோ? காணியை விற்று கடன் மிகப்பட்டுக் கலியாணம் முடித்துக் கந்தறுந்துபோன இலண்டன் கலியாணங்களையும் வெளிநாட்டு மோகத்தில் சிக்கித் தவிக்கும் சிங்காரிகளையும், சமூகநோக்குடன் எடுத்துக் காட்டும் பாங்கு வியக்க வைக்கின்றது. ஏக்கப் பெருமூச்சாய் எங்கள் நிலம் பறிபோவதையும் தேர்தல் வந்துவிட்டால் தட்டும் படலைகளையும், பின் இவரைத் தேடும் படலத்தையும், மதவெறியால் மக்கள் நிலைகுலையும் பாங்கினையும் கண்டு மனமே பதறாதே ! என்ற ஊக்கத்தையும், உற்சாகத்தையும்,

மனஉறுதியுடன் வாழ எமக்கு கவிஞர் மதியுரைக்கும் பாங்கு, வைரமான நெஞ்சுறுதியை நிலைநாட்டி நிற்கின்றது. சூரியன், சுவடுகள் இப்படி பற்பல கோணத்தில் பாட்டிசைத்த புலவர் - வானத்தையும் வசப்படுத்தலாம். வாழப்பிறந்தவன் நீ சாகப் பிறக்கவில்லை என்று தட்டிக் கொடுக்கும் பாங்கு பாரதியை நினைவூட்டுகின்றது. சாதனைப் பயணத்தை மேற்கொள்வாய் தமிழா! என்று தாயையும் தமிழையும் இணைத்து சங்க நாதம் செய்யும் புலவன், தனது கடைசிப் பாடலிலே இறுதிவரிகளாக **"தட்டிக் கொடுத்துவிடத் தரணியிலே சிலர் இருந்தால், எட்டிப்பிடித்திடலாம் வானத்துச் சூரியனை"** என்று வேண்டுகிறார் கனவுகளைக் காணுங்கள் என்றார் பேரறிஞர் அப்துல்கலாம். இக்கவிஞரின் பாடல்களை திறனாய்வு செய்வது போல் எழுதிவிட்டேன். மேடையில் பகிரவேண்டியதை அணிந்துரையில் எழுதிவிட்டேனோ? என அஞ்சுகின்றேன். மேடையிலே அரங்கேற்றும் பேச்சு காற்றினிலே கலந்து, கரைந்து மறைந்துவிடும். ஏட்டிலே எழுதினால் நூலோடு நிலைத்துவிடும் என்று எழுதிவிட்டேன்.

முடிவாக - கம்பன், வள்ளுவன், பாரதி, பாரதிதாசன், நம் யாழ்ப்பாணப் புலவர்களையும், கண்ணதாசனையும், பட்டுகோட்டையா ரையும் மனத்திருத்தி அவர்கள் பாடல்களைப் படித்துச் சுவைத்தவன்தான் இக்கவிஞன். தமிழ் படிக்காது புதுக்கவிதை மட்டும் எழுதும் புத்தி ஜீவிகளுக்கு இது ஒரு ஊக்கமருந்தாகும்.

இலைமறைகாயாக இப்படி பற்பல புலவர்களை நாடறியச் செய்வது நம் கடனன்றோ ! பெற்றதாயையும் பிறந்த பொன்நாட்டையும் நேசிப்பவன் கவிபாடும் கவிஞனாகின்றான். வயாவிளானைப் பிறப்பிடமா கக் கொண்டு பாரம்பரிய கலை மரபில் பிறந்தவன் என்பதால் குட்டி மீனுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமா? என்ற உண்மையை உணர்த்திய கவிஞன் பல ஆயிரம் கவிபாடிப் புகழ் காண்க !

அன்பன்

விகடகவி

**மு. திருநாவுக்கரசு**

11.08.2014 (ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி)

# வாழ்த்துரை

**Kavimani K.Anantharajah,**
(Annaithasan), *Rtd. Principal*
'SriRangam',
Urelu East, Chunnakam.
TP. 021 321 5033



**கவிமணி க.ஆனந்தராசா,**
*(அன்னைதாசன்), ஓய்வுபெற்ற அதிபர்*
இசைசொற்பொழிவாளர்,
"ஸ்ரீரங்கம்", ஊரெழு.

ஹலோ என்றால் கிலோவில் காசு வரும் காலம்.

ஏற்றிப்போற்ற எடுபிடிகள், வால்பிடிகள். குயில்களை உறங்க வைத்துக் கோட்டான்களை அலறவைக்கின்றது தமிழ் உலகம், எங்கள் கலையுலகம். **"யாருமற்ற தீவினிலே"** என்ற கவிதைத் தொகுப்பைத் தருபவன் "கோச்சி வரும் கவனம்" என்ற தமிங்கிலீஷ் (தமிழ் + இங்கிலீஷ்) அறிவிப்பின் கீழ் "கொப்பரும் வருவார் கவனம்" என்று, அன்று எழுதிய ஆசுகவி கல்லடிவேலன் பிறந்த மண்ணின் மைந்தர்களுள் ஒருவன்.

V.V. வைரமுத்துவை நடிகமணியாக உலகமேற்க ஒத்தாசைக் கலைஞனாக உழைத்த கலைமாமணி வே.மார்க்கண்டுவின் பேரன் இவன். தந்தை, சித்தப்பாமார் இருவர், சகோதரிமார், மருமக்கள் ஒவ்வொருவரும் துறைசார்ந்த கலைஞர்கள். ஆக, இவன் பாடுவது ஒன்றும் பெரிதல்ல எமக்கு. பாடியே, எழுதியே ஆக வேண்டும்.

காதல் சோகம், பாசம், வீரம், வேசம் என்பவற்றைக் கொட்ட முயற்சித்துள்ளான் எனத் தெரிகின்றது. சில இடங்கள் உச்சத்தைத் தொடுகின்றன.

மணநாளின் போதினிலே மனதார வாழ்த்திடுவேன் ...
கனவில்லை காலம் வரும் கைபிடிக்க வந்திடுவேன் ...
சொற்களால் சுட்டவன் சொந்தமாக முடியாது ...
வீடுவருவார் காட்டு செருப்பை ...
பிறந்த ஊரை நினைவிற் கொள் ...
அம்மா என்று அழைத்துப்பார் அருகினிலே தெய்வம் வரும் ...
சாப்பாட்டுக்கு அழுகின்றான் ஏழையின் மகன் ...
இல்லாதான் இல்லத்தை ஈ கூட நெருங்காதே ...

இப்படிப் பற்பல முத்தான வரிகள் இங்குள்ள கவிதைகளில் மிளிர்கின்றன. இவை வெறும் முத்தான வரிகளல்ல. எம்தேசம் சொத்தாக்க வேண்டிய வரிகள். இவை மட்டுமல்ல, நறுக்கியல் வரிகள் ஒவ்வொன்றும் பொறுக்க வேண்டிய மணிகளாக இருப்பது கவிஞனின் உள்ளக் குமுறல்களின் வடிகால்களாக நிற்கின்றன. கிறுக்கியவற்றை யெல்லாம் கவிதையாகப் பிதற்றுவோருக்கும் பதிப்போருக்கும் இவை ......

ஆக, பிறவிக் கலைஞன் - கவிஞன் இவன் மென்மேலும் வளர்ந்து எம் தமிழுலகத்திற்குப் பல ஆக்கங்களைத் தர என் அன்னை ஆதி பராசக்தியைப் பூசித்து, யாசித்து ஆசிகூறி அமைகின்றேன்.

வாழ்க ! வளர்க ! தொடர்க இவர் பணி.

**கவிமணி அன்னைதாஸன்**
(வயவையூரான்)

11.08.2014

# நயப்புரை

என் ஆசைத்தம்பி சீதாராமா !
யாருமற்ற தீவினிலே கூட
" மொழியை நீ பாடு
மொழி ஒரு நாள் உனைப்பாடும் !
சூரியனை மேகங்கள் என்றும் மறைப்பதில்லை.
நீ உலவுகின்ற சூரியன்.
உன் அருகே பனித்துளிகள் விழுந்தாலும்
அவை மறைவதில்லை.
தன்னம்பிக்கை உயிர் பெற்று பயிராகும், மரமாகும் "

"நீ என் தம்பி " என்றே ஊர் சொல்லும் .
"நீ என் தகப்பன் " என்றே நான் சொல்வேன்

உன்பாதம் அடி எடுத்து நீ நடைபயின்ற வேளைகளில்
நான் மிக மிக மகிழ்ந்தேன் அன்று

இன்று ...
உன் கவிநடை கண்டு கைகுலுக்குகின்றேன்.
வாழ்த்துகின்றேன், வணங்குகின்றேன்.
ஒவ்வொரு வரிகளிலும் மிக ஆழமான
கருத்துக்கள் வெளிவரத்துடிப்பதைப் பார்க்கிறேன்.

காலைப் பூங்காவின் இனிய மலர்கள் நாம்
பேரனும், சிறிய தந்தையும் தந்த பொக்கிஷங்களை
காவித் திரிய வேண்டியவர்கள் நாமே.
தொடரட்டும் உன் பணிகள்.

வெற்றிப் படிகளில் நீ காலடி எடுத்து வைக்க வேண்டிய
இனிய தருணங்கள் தான் உனக்கு.
ஒவ்வொரு படிகளிலிலும் நானும் உன் கூடவே
வருகிறேன் ... சகோதரியாய்

அழகிய நதி நீ அசைகின்ற நாணல் நீ
அணைக்கின்ற தாய் நீ ....
உதிக்கின்ற சூரியன் நீ
காற்றும் ஒரு கணம் நின்று கைதட்டும்.

இந்த நாள் இனியநாள் ஆகட்டும்
என்றென்றும் என் அன்பு வாழ்த்துக்கள் !

அன்புடன் யாழ் தமிழ்மகள்

**மணிமேகலை மகாராஜா**

(கனடா)

16.08.2014

# களிப்புரை

"கற்பனை வளமும், இரசனையுணர்வும் கொண்டவன்
கவிஞனாகின்றான், கலைஞனாகின்றான்"

சிறுவயது முதலே பொதுஅறிவு விடயங்களிலும் கலைகளிலும், எழுத்துத் துறையிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வரும் எமது அன்புச் சகோதரனின் இரண்டாவது வெளியீடு " யாருமற்ற தீவினிலே..."

தோள்மீதில் சுமந்து, கூடிக்குலாவி விளையாட்டுக் காட்டி, அறிவுரைகள் பல கூறி, ஆசையாய்க் கற்பித்து நின்ற நாங்கள் ..... இந்நூல் வெளியீடு கண்டு அகமகிழ்வடைகின்றோம்.

எங்கள் பாசத்திற்கும் நேசத்திற்குமுரிய சகோதரன், எதிர்காலத்தில் சமூகத்திற்குப் படிப்பினைகளை ஊட்டக்கூடிய வகையில் இலக்கியங்களைப் படைக்க வேண்டும். தமிழ் மணம் கமழ, தமிழர் வாழ்வுதனை அவை பறைசாற்ற வேண்டும் என உளமார வாழ்த்துகின்றேன்.

வாழ்க ! வாழ்க !!

அன்புச் சகோதரி
**திருமதி. கிருஷ்ணவேணி சிங்கராஜன்**
(ஆசிரியை, யா/வயாவிளான் ம.ம.வி)

16.08.2014

# விளிப்புரை

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள்
வைக்கப்படும்

கவி எனும் வானிலே
சிறகடித்துப் பறந்து
சொற்சுவை
பொருட்சுவையுடன்
நிறையக் கவிப்பூக்கள்
சொரியட்டும் !

உன்னுடைய எழுதுகோல்
எழுத்துக்களை
தொடரட்டும்.
நிறுத்தாதே !
சிந்தனைச் சிறகுகள்
விரியட்டும் !

கவிநூல் வெளியீடு
சிறப்புற அமைய என்றும்
அன்பான வாழ்த்துக்கள் !

அன்புச் சகோதரி
**கங்கைவேணி கைலைவாசன்**
Bolly Wood Couture
France.

# என்னுரை

தமிழ் ஒரு பெருங்கடல்
தனியாக என்னால்
குடித்திட இயலாது
இயன்றவரை பருகியுள்ளேன்.

ஏக்கங்கள், வலிகள், எதிர்பார்ப்புக்கள்,
ஏமாற்றங்கள், சோகங்கள், பொறாமைகள்
என்று பலவற்றை
சொற்களால் சுவையூட்டிப் பானமாக்கி
பருகத் தந்துள்ளேன்.

பருகிச் சுவையறிந்து தவறுகள் நேர்ந்திருந்தால்
என்மீது கணைதொடுத்து ...
நிறைவுகள் இருப்பின்
ஏற்றத்திற்கான வழிகள் காட்டி
மாற்றத்திற்கான மருந்தாக இருந்திடுக !

யார் சொன்னார் என்பதை விடுத்து
எதைச் சொன்னார் என்பதில்
எப்போதும் கண்ணாய் இருந்து
தமிழ் உலகை
தமிழால் ஆளுவோம்.

இந்தப் படைப்பாளியை
சொந்தப் படைப்பாளியாய்
ஏற்றிடுக !

தமிழ் அன்பு கலந்து

14.08.2014

**வயவையூர் கை. சீதாராமன்**

# அன்பியல்
# வரிகள்

## யாருமற்ற தீவினிலே . . .

உன் மனக்கவலைகள்
என்னால் குறைந்தன !
என் மனக்கவலைகள்
உன்னால் தொடர்கின்றன !

வானம் போல
விசாலமான மனதுடன்
நாளும் பொழுதும்
நல்லவனாக வலம் வந்தேன்
அன்று
இரக்கம்
என்
இதயத்தைத் தொட்டதால்
இன்று
இதயமே வெடித்து
குருதியில் நனைகின்றேன் !

உனக்கு பரிசளிக்க
என்னிடம்
தூய்மையான
இதயம் இருக்கிறது !

எனக்கு பரிசளிக்க
முட்கிரீடங்கள் பல
உன்னிடம் இருப்பது !
என்
மனக்கண்ணில்
தெரிகிறது !

கனவுகளைச் சுமந்து
கற்பனையில் மகிழ்ந்து
காலங்கள் உருண்டோடின !

இன்று ...
நினைவுகளை மட்டும்
எனக்கென பரிசளித்து
நீங்கி விட்டாய் !
நிலையில்லாத
வேறொரு கிரகத்துக்கு !

வாழ்க்கை
ஒரு வட்டம் தான்
சுற்றி வருகையில்
வந்த இடம்
மீண்டும் வரும் !

எல்லாக் காலமும்
வசந்த காலம் ஆவதில்லை !
இலையுதிரும் சருகாகும்
பூ மலரும் அழகாகும்
எல்லாம் நியதிதான் !

யாருமற்ற தீவினிலே
தனிமரமாய் நிற்பாய்
நீ !
அவ்வேளையில்
உன்னைத் தேற்றிட
யாருமே இருக்க மாட்டார் !

## உலகம் உருண்டையடி ... !

நீ
பாவம் என்று
பரிதாபம் என்று
நேற்றுவரை நினைத்திருந்தேன்
கைகொடுத்த நெஞ்சம்
இன்று ...
கனக்கிறது !

இனிக்க இனிக்க பேசி
என் மனதில்
விழுந்தாய் ஒருநாள் !
வாழ்வில்
நொந்து போன
நியமங்களை
வலிகளை
உரைத்து நின்றாய் !

நம்பினேன் நம்பினேன்
நாள் முழுக்க நம்பினேன் !

நல்ல தொரு சிந்தனையில்
நாள் தோறும் பலவிதமாய்
ஆதரவுக் கரம் கொடுத்தேன்
அன்பான ஒரு
உறவாக நினைத்து

காலங்கள் மெல்ல
உருண்ட போது
கலைந்து போனது
உறக்கம் மட்டுமல்ல
என்
கனவுகளும் தான் !
உன் முகத்திரை
அலங்கோலமாய்
கிழிந்த போது ...
என்னை உணர்ந்தேன்
பெண்ணை அறிந்தேன்

எனக்கு மட்டுமல்ல
எத்தனையோ ஆண்களுக்கு
ஏமாற்றத்தின் வலிகளை
எந்நாளும் கொடுக்கிறாய்
என்று ...

உன்னிடமோ
விதவிதமாய் "சிம்காட்"
வேண்டிய போது
வேண்டியவருடன்
தொடர்பு கொள்ள
தொலைபேசி இரண்டு !

உத்தம புத்திரி என்று
ஊரை மட்டுமா ஏமாற்றினாய்?

நம்பியிருந்த
நானும் ...
நாய் போல
நடு வீதியிலே ...!

ஆறேழுபேருடன்
அன்னியோன்னியமாய்
தொலைபேசியில் தொடரும்
உனது நட்பை
என்னென்று சொல்வது?

காது குத்துவதில்
நீ
கனமான கில்லாடி !
கேள்வி கேட்டால்
விளக்கம் சொல்லுவதில்
வித்தைக்காரி !

இளிச்சவாயன்
என்பதற்கு
உதாரணமாய் நான் !
கனத்துப் போனது
என் நெஞ்சம் !
கனவு ஒன்று
கலைந்தது போல் ...

என் ...
கண்ணிமைக்குள்
கத்தியைச் சொருகி
காயம் தந்தவளே !

உலகம் உருண்டையடி !
உன்னைப் பந்தாட
ஒருவன் வருவான் !

நீ
எறிந்த பந்து
உன்னிடமே திரும்பி வரும் !
உலகத்தில் ஓர்நாள்
நடைப்பிணம் ஆகுவாய்
நீ ...!

# என் காதல்...

அன்பு எனும் சொல்லுக்கு
அர்த்தமாய் ஆனவளே...!
உன்னை நினைந்து தினம்
உறங்காமல் பாடுகிறேன்!

நெஞ்சத்தில் உனை வைத்து
நெடுநாளாய்க் காத்திருந்தேன்
வஞ்சம் புரிந்து நீயும்
வழிமாறிப் போனது ஏன்?

காதலுக்குக் கண்களில்லை
காதலர்கள் சேர்வதில்லை
ஆதிமுதற் சொல்லி வந்தார்
அத்தனையும் நம்பவில்லை!

காவியத்தில் பலகாதல்
கைகோர்த்துப் பிணைந்தனவே
அஃதுபோல் என்காதல்
இனிக்குமென எண்ணிவந்தேன்!

எல்லாமும் பொய்யானது
என்னிதயம் தீயானது
உள்மனதின் சோகமதை
உரைத்திடவோ வார்த்தையில்லை!

பண்புடையான் பதிவிரதை
என்துணையே என்றிருந்தேன்
பணமுடையான் வந்துவிட்டான்
என்னையவள் வெட்டிவிட்டாள்!

காதலென்ற கோயிலுக்கு
காதலியே தீவைத்தாள்
காத்திருந்தோன் கவிஞனானேன்
நேற்றுவந்தோன் அரசனானான்!

கல்லாதான் காதலுக்கும்
காலமுண்டு பணமிருந்தால்
இல்லாதான் காதலுக்கு
எந்நாளும் இருள்தானே!

போனவளின் நினைவுகளால்
புலம்புவதால் பயனில்லை!
ஆனாலும் இப்பிறப்பில்
ஒருபோதும் இதை மறவேன்!

இருளொன்று உண்டானால்
அடுத்துவரும் விடிகாலை
நாளைவரும் நாளெனினும்
சோகத்தைத் தீயிட்டும்!

# காத்திருந்த காதல்...

காத்திருந்த காலமெல்லாம்
ஓர் கனவாய் போனதடி - நீ
வீற்றிருந்த இதயமிங்கே
வெற்றிடமாய் ஆனதடி !

வாரத்தில் ஓர்தடவை
வந்திடுமே உன் கடிதம் - மனப்
பாரத்தை இறக்கி உலகை
மறந்திருக்கும் எந்தன் மனம் !

வாழ்க்கையிலே வசந்தமெல்லாம்
அப்பொழுதிற் கண்டிருந்தேன் - என்
வண்ணமயில் உன் நினைவில்
வானமதிற் சிறகடித்தேன் !

யார் கண்கள் பட்டனவோ
நீயெனைப் பிரிந்தாய் - அத்
தீயெனைச் சுட்டதால்
விழிகளை நனைத்தேன் !

வெளிநாட்டு மாப்பிள்ளை
வசதியுடன் வந்ததனால் - இன்று
தடம்மாறிப் போனாயே
"தாடி" யினை எனக்களித்து

காத்திருந்தேன் உன்நினைவில்
காலமெல்லாம் போனதடி - நீ
வீற்றிருந்த என்னிதயம்
வெந்தணலில் வாடுதடி !

உதிர்ந்தமலர் காம்பினிலே
இணைய வழியில்லை - உனை
ஏற்ற என் நெஞ்சில்
எவர்க்கும் இடமில்லை !

உலகத்தின் மூலையிலே
எங்கோ நான் இருந்தாலும் - உன்
மணநாளின் போதினிலே
மனதார வாழ்த்திடுவேன் !.



# இருவரும் வேறல்ல

நேற்று...
நிலவும் வானமும்
ஒன்றாக இருந்தன
இன்று...
முகிற்கூட்டங்களின்
முரட்டு அணிவகுப்பால்
நிலவைக் காண
முடியவில்லை!

தனிமை
கொடுமையானது
காதல்...
ஒரு
போர்க்களம்!
இரண்டும் ஒன்றிணைந்தால்...
இதயம் படும்பாடு
இறைவனுக்கே தெரியும்!

அன்பே...!
உனக்கும் எனக்கும்
இப்போது
இடைவெளிகள் அதிகம்தான்
ஆனாலும்...
தூரங்கள் தொலைவானாலும்
பாசத்தில் இடைவெளிகள்
இம்மியளவும் இல்லை!

எங்கள்
இதயங்கள் அருகிருந்து
"ஐ லவ் யூ" சொல்கின்றன!
இன்று மட்டுமல்ல
என்றைக்கும்
நான்
உன்னை மறப்பதுமில்லை
பிரியப் போவதும் இல்லை!
ஏனென்றால்...
பிரிவைத் தாங்கும் மனோதிடம்
இப்போது
என்னிடம் இல்லை!

என்னை
பார்க்க விரும்புகின்றாயா?
கண்ணாடியில்
உன்முகத்தைப் பார்!
விம்பத்தில்
என்னுருவம்
உனைப்பார்த்துப் புன்னகைக்கும்!
ஏனென்றால்...
இருவரும் ஒருவரே !

# கனவெனவே ஆகட்டும்

காலையிலும் மாலையிலும் நானுலவும் வீதியிலே
காளைநான் அன்றொருநாள் பயணிக்கும் வேளையிலே
கண்களையே நம்பவில்லை என்னெதிரில் பேரழகுப்
பெண்ணொருத்தி நடைபயின்றாள் அன்றலர்ந்த தாமரைபோல்

பிரிந்திடவும் மனமின்றிப் பேசிடவும் துணிவின்றிப்
பிரியமகள் நினைவுடனே எனதில்லம் ஏகினேன்
அன்னவளின் இதயமதில் நானிருக்க அனுமதிக்காய்
அன்புடனே ஓர்கடிதம் அக்கணமே நான் வரைந்தேன்!

மறுநாளிற் காலையிலே அவ்விடத்தில் அவ்வணங்கின்
வருகைக்காய் காத்திருந்தேன் கண்ணிரண்டும் பூத்திருந்தேன்
ஏய்க்கவில்லை என்னையவள் அவ்வழியிற் தான் வந்தாள்
ஏக்கமுடன் அவள்கையில் என்மடலைத் தான் கொடுத்தேன்!

அக்கடிதம் தனைப்படித்து அவள்நிற்கும் போதினிலே
விக்கித்து நின்றேனே முடிவறியும் வேதனையில்
மடல்படித்த மங்கையவள் நாணமுடன் எனைநோக்கி
கடலலையாய்ப் புன்னகைத்தாள் வானமதில் நான் பறந்தேன்!

பேரழகுப் பாவையவள் எந்தன்வசம் ஆனதனால்
பாரினிலே நானொருவன் பாக்கியவான் ஆகிநின்றேன் !
பேருவகை மிதப்பினிலே பேதையவள் துணையுடனே
ஊருலகம் தான் மறந்தேன் உள்ளமதன் நிறைவுடனே !

அலையடிக்கும் கடற்கரையோ அதனருகிற் சோலைகளோ
கலைததும்பும் சாலைகளோ எங்கணுமே சுற்றிவந்தோம் !
எம்பாதம் தழுவாத இடமில்லை அவ்வேளை
ஒண்காதல் வானமதில் சிறகடித்தோம் நாமிருவர் !

அத்தானின் உருவமது அமர்ந்திட்ட இதயமதில்
எத்தகையோன் வந்தாலும் இடமில்லை இதுஉறுதி !
எந்தனுயிர் காதலனின் அன்பில்லை என்றானால்
வெந்தணலில் வேகியுடன் ஆவியினை மாய்த்திடுவேன்

என்றுதினங் கூறிடுவாள் என்னவளும் எனைத்தழுவி
அன்னவளின் அன்பையெண்ணி அந்தரத்தில் நான்மிதப்பேன் !
இத்தகையாள் என்வாழ்வில் கிடைத்தாளே என்றெண்ணி
இத்தரையை மறந்திருந்தேன் அவள்பெயரை நினைத்திருந்தேன்

தடைகளோ ஏதுமின்றித் தொடர்ந்தன சிலகாலம்
இடையூறு வாராது எம்காதல் இனித்ததுவே !
தாயாரின் ஆசியுடன் இனிதுமணம் புரிந்திடவே
தக்கதொரு நேரமதைக் காத்திருக்கும் வேளையிலே

வெந்தபுண் மீதினிலே வேலதனைப் பாய்ச்சுதல் போல்
வந்ததுவே ஓர்கடிதம் என்னவளின் கையிருந்து
விழியிரண்டும் தடுமாறக் கையிரண்டும் நடுநடுங்க
வழிதெரியா அந்தகன்போல் நிலைமாறி மடல் பிரித்தேன் !

"என்னவரே ! என்னினைவை இன்றுடனே மறந்திடுக !
எம்காதல் கெட்டதொரு கனவெனவே ஆகட்டும்
சொந்தமென் மைத்துனர் என்னை மணமுடிக்க
சீமையிலே தானிருந்து சீக்கிரமாய் வருகின்றார் !

மடல்படித்த விழிகளையோ நம்பிடவும் முடியவில்லை
உடல்துடிக்க வேதனையில் விம்முகின்றேன் ! விம்முகின்றேன் !
என் மனதில் புயலடிக்க ஏதுபிழை நான் செய்தேன்?
பெண் மனதை அறியாமல் நானிருந்தேன் பெருந்தவறே !

அத்தானே ! என்றவளே வெறுத்தாளே: ஆதலினால்
பித்தானேன் பேதையவள் வாய்மொழியைத் தான் கேட்டு
செத்தேனே ! நானுமிங்கு காதலதன் தோல்வியினால்
இத்தரையின் மீதினிலே காதலொரு நாடகமே !



# நான் ... நீ ... !

நான்
உன்னில்
அதிகளவு கோபப்படுகிறேன்
என்றால்
நீ ...
பெருமைப்படு
திருப்திப்படு !
ஏன் என்றால்
உரிமையுள்ள உறவுகளிடம்தான்
உண்மையான பாசமும்
உண்மையான கோபமும்
உணர்வோடு
உயிரோடு
வாழ்ந்து கொண்டிருக்கும் !



# நாயகியே ... !

என்
கண்கள் என்ற
கமெராவுக்குள்
கைப்பற்றப்பட்ட
புகைப்படம் நீ !
ஓசைப்படாமல்
உன்னில்
ஆசைப்பட்டேன் !

என்
இதயம் என்ற
இல்லத்தின்
உள்ளே வருவாயா
என்று ...
ஏக்கப்பட்டேன் !

"கைப்பேசி " க் கடவுள்
கையோடு தந்த
"எஸ் எம் எஸ்" வரத்தால்
என்னவள் ஆனாய் நீ !

இருவேறு ஓரங்களில்
இருப்பிழந்து தவித்தோம்
இன்று ...
என்ன "டா " என்று
இடைவெளியை
இல்லாதொழித்தாய் !

என்றாலும்
என்னுள் ஏனோ
பயத்தின் வர்க்கம்
படலை வரை வந்து
படபடக்கிறதே !

உன் தந்தை
வீரப்பன் மீசையோடு
வீறுநடை போடுகையில்
மூச்சுப் பிடித்து
வேர்த்துக் கொட்டுகிறதே !

காதலில் பயமும் உண்டு
உண்மை தான்
ஆனால் ...
நானோ
சிங்கக் குகையில் அல்லவா
"சிங்கிள்" மனிதனாய்
சிரித்துக் கொண்டிருக்கிறேன்
உன்னைப் பார்க்கின்ற
மகிழ்ச்சிப் போதையில் ...

சிங்கம் - அந்தத்
தங்கம்
எப்போது எனக்கு
சங்கு ஊதுமோ
நானறியேன்
நாயகியே ...!

# கனவு அல்ல

கண்கள் கண்ட

கனவுகள்...

கனவுகளாகவே

கலைந்து போகும் என்று

கவலை கொண்டேன்!

அவை

கனவுகள் அல்ல

நிகழப்போகும் நிஜங்கள் என்று

நீயுரைத்தபோது

என்னை நான் மறந்தேன்

வானத்தில் பறந்தேன்!

உயர உயர...

உன் நினைவுகளைச் சுமந்து ...!

## சோகம் ...

அன்பே ...!

என்னை நீ மறந்தாய்

நம்

காதல் தகர்ந்து போனது !

உனக்கு

வேறொரு தாலி

வேலியிட்டது !

எனக்கு கன்னத்தில் தாடி

சோகம் சொல்கிறது !



# என்னவளே ...

மணல் மீது கவி வரைந்தால்

மீளும் அலை அழித்துவிடும்

மனதோடு கவியெழுது !

மாலையிடக் காத்திருப்பேன்

நிஜமாக உன் மனதை

நீங்கிடாமல் இருக்கின்றேன்

கனவில்லை! காலம் வரும்

கைப்பிடிக்க வந்திடுவேன் !



# சமூகவியல் வரிகள்

## என் மகனே !

வீட்டுக்குள் விட்டால்
அழுக்காகிப் போகுமென்று
பின்புறத்தில் ஒரு கொட்டில்
போட்டு வைத்தான் பெற்ற மகன் !

பெற்றமகன் ஆக்கி வைத்த
பொறிப்பந்தல் தன்னுள்ளே
நட்டநடு முகடு பார்த்து
நாலு முழு வேட்டி பிய்ந்து

வாயைப் பிளந்தபடி
வடிவேலு படுத்திருக்க
வண்ணக் கனவுகளோ
வகையாக வந்து போச்சு

கையைப் பிடிச்சு நான்
கால் நடையாய்க் கூட்டிவந்து
பள்ளிக் கூடத்திலே
படிக்க வைத்த நாட்களையும்

காய்ச்சல் வந்ததெண்டு
கனதூரம் தோளிலுன்னை
தூக்கிப் பொடி நடையாய்
தவிச்சு மருந்தெடுத்து

தங்க மகன் உன்னை நான்
தாங்கி வளர்த்த கதை
இன்னும் நினைப்பிருந்தால்
இப்படி நீ வெறுக்கமாட்டாய் !

கொம்மா மேலை போக

இம்மா நிலத்து மேலே

தனியாளா நின்றிருந்தேன்

துணையாளா உனக்காக

எல்லாம் மறந்தாயோ

எந்தனுயிர் செல்ல மகன்

சாகட்டும் கிழவன் என்றோ

சாக்கடையில் என்னை விட்டாய்?

வடிவான பெட்டை எண்டு

விடியாமல் நீ தவிக்க

வந்து பேசி முடிச்சன் நான்

வைச்சுவிட்டேன் ஆப்புத்தான்

அவள் வந்த பிறகுதானே

அப்பாவை நீ மறந்தாய்

சிறகில்லா பறவையாக

சீக்கிரத்தில் சாகப்போகிறேன்

என்ர மோனே உனக்கொன்று

என்னுரையாய் சொல்லுகிறேன்

செத்தபிறகு எனக்கொண்டும்

சோடிக்க வேண்டாமடா !

நானிருந்த கொட்டிலதை

நாலுநாளில் பிடுங்கிவிடு !

உன்ர மகன் உன்னையங்கு

இருத்திவிட்டால் தாங்க மாட்டேன் !

## வாழ விடுங்கள்!

சொந்த இடம் விட்டு
நொந்து நொந்து
இடம் பெயர்ந்த
பந்து போல
பல இடங்கள் உருண்டோடி
"அப்பாடா..." என்று
ஆறுதல் பெருமூச்சோடு
ஊருக்கு வந்தோம்!

வந்த பின் தான்
வகையாய் உணர்ந்தோம்
ஏன் வந்தோம்
என்று...!

ஊருக்குள்...
சொத்துச் சண்டை
எல்லைச் சண்டை
பெண்கள் மீது
தொல்லைச் சண்டை
போதாது என்று
கோயில் சண்டை

நீ பெரிது
நான் பெரிது
என்று

நீண்டு செல்கிறது
சண்டைகளின் பட்டியல்!

காலச் சுழற்சியில்
கண்டும் காணாமலும்
கண்மூடி இருந்து
கவலைகளைத் துடைத்து
வாழப் பழகுகையில்...

இரக்கம் இல்லாத
இழிந்த பிறப்புக்கள் சில
உறக்கம் மறக்க வைத்து
ஊமையாய் அழவைத்து...
களிப்பின் சிகரத்தில்
கைதட்டி இரசிக்கின்றன !

கூடில்லா குருவிகள் என்று
வீடொன்றை இந்திய அரசு
இனாமாக தந்துவிட்டால்
இங்குள்ளோர் இடைஞ்சலாக

வெளிநாட்டில் பிள்ளையுண்டு
வசதியான வாழ்க்கையுண்டு
என
உள்நாட்டுச் செயலகம் நோக்கி
மொட்டைக் கடிதங்கள்
பறக்கின்றன!

அயல் நாட்டு அரசாங்கம்
அனுதாபம் கொண்டு
தருகின்ற பொருளுக்கு
இவர்களுக்கேன் தடுமாற்றம்?

வன்னித் துயரத்தின்
வலிகடந்து துயர் மறந்து
இங்கு வந்தோம்!

இவர்கள்...
வாழவிட மாட்டார்கள்
என்று தெரிந்திருந்தால்
அங்கேயே முடிந்திருப்போம்
அகமகிழ்வோடு!



## காலம் பதில் சொல்லும்

தம்பி என்று உன்னை
நம்பி இருந்தேன்
கம்பி செருகி விட்டாய் !
காயம் கொண்டவன்
துடிக்கின்றேன்

காணும் இடமெல்லாம்
கனகதை கூறி
நக்கல் நளினம் கலந்து
நன்றாய் நீ பேசுகையில்
நான் ...
நிலத்தில் நிற்காமல்
வானத்தில் அல்லவா
பறந்தேன் !

வித்தை தெரிந்தவன்
நீ ...
விளையாட்டுத்தனம்
உன்னிடம் இல்லை
என்று
வீணாக எண்ணினேன்

கற்றுக் கொடுத்தேன்
சிலவற்றை ...
தொடுவாய் தெளிவான
திசையை என்று
விட்டுக் கொடுத்தேன் !

பேசிப் பேசியே
பெறுமதி மிக்க
உறவாக
ஊருக்குள் உலாவந்தாய் !

"அண்ணன்" என்று
அழைத்து நீ
அனைத்தையும்
ஆராய்ந்த போது ...
ஆலோசித்த போது ...
ஆனந்தம் கொண்டேன்

தக்கோன் இவன்
தரமுடையோன் என்று
உன் ...
சுயநலத்துக்காக
சூது செய்யும் போதுதான்
என்னை உணர்ந்தேன்
உன்னை அறிந்தேன் !
உத்தமன் அல்ல
ஊருக்கே உதவாதவன்
நீ என்று !

கூட இருந்தே
குழி பறிப்பதில்
பட்டங்கள் பல பெற்ற
பண்டிதன் நீ !

உன்னைச் சுற்றி
உருப்படாத சிலர்
ஊருக்குச் செய்யும்
அநியாயங்கள் ...
எண்ணிப் பார்க்கையில்
கண்ணில் நீர்வரும் !

ஆட்டம் போட்டவர்கள்
அடங்கிப் போனது
உலக வரலாறு !

மக்கள் தீர்ப்பு
மகேசன் தீர்ப்பாக மாறும்
நெற்பயிருக்குள்
புற்களான
நீயும் ...
உன் கூட்டமும்
பிடுங்கி எறியப்படும்
காலம் வரும் !

அமைதியானவர்கள்
அடங்கிப்போனவர்கள் அல்ல !
பொறுமைக்கு மத்தியிலும்
பொங்கிப் பிரவகிப்பார்கள்

நீதி சாகாது - சிலவேளை
நித்திரை கொள்ளும் !
போதி மரத்துப் புத்தர் போல்

உனக்கும்...
ஞானம் பிறக்கும் ஒருநாள் !
அதுவரை ...
காத்திருப்பேன்
கனவுகளுடன் !



## உணர்ந்து கொள்

மஹா பாரதப் போர்
இதிகாசம் கூறும்
மிகப் பெரும் போர்
முடிந்த பின்
கண்ட மிச்சமென்ன?
ஒரு சிலரின்
உன்னத உயிர்கள் மட்டும்
மிஞ்சினவாம் ...

எங்கள் நாட்டில்
முன்னொரு நாளில்
கொத்துக் கொத்தாய்
உயிர்கள்
காவு கொள்ளப்பட்ட போதும்

யுத்தம்
அமைதி தரும் என்றா
எல்லோரும்
நம்பியிருந்தனர்?

முன்னொரு காலம் ...
எமலோகத்தின்
சிறப்பு விருந்தினர் பகுதியை
நிறைத்தவர்கள்
இலங்கையர்கள் !

பயத்தின் விளிம்பில்
பூட்டிய கதவுக்குள்

புழுங்கியே வாழ்ந்த
உறவுகள் எத்தனை?

சகோதரப் படுகொலைகள்
கல்விமான்களைக் காவு கொள்ளும்
ஈனச் செயல்கள்
ஈட்டித் தந்திடுமா
இனிய தேசத்தை?

சுடுகாட்டின் மத்தியில்
சாம்பல் மேட்டில்
நின்று ...
உரிமைகள் குறித்து
உரத்துக் கூறுவதில்
என்ன பயன்?

ஏனிந்தச் சாவுகள்
எதற்கிந்தக் கொடுமைகள்
கூடிப் பேசிக்
குதூகலிக்க முடியாதா?

முயன்று பார்
முடியாதது என்று
எதுவுமில்லை !

சமாதானக் கதவுகளை
சரியாகத் திறந்து பார்
அமைதிப் புறா
உன்னை ...
அரவணைக்கும் !

# சிந்தித்து செயற்படுக !

வறுமைக்குப் பிறந்திட்ட
அப்பாவும் அம்மாவும்
பொறுமையாய் இருந்திருந்தால்
பிறந்திருக்க மாட்டேன் !

பிறந்தாலும் பிறந்தேன்
பெருமையாய் வளர்ந்தேன்
மறந்தாலும் தவறிடாத
மங்கையாய் ஆனேன்

ஆண்டொன்று போனால்
வயதொன்று போகும்
அதுபோல எனக்கும்
வயதேற லாச்சு

தரகரோ வந்தார்
தரகுகள் சொன்னார்
"பொறுமகள்! உனக்கொரு
பொடியனைத் தாறேன்"

அருமையாய்ச் சொன்னார்
ஆறுமுகம் தரகர்
அடுத்த நாள் வந்தார்
அரியதோர் படத்துடன்

புகைப்படம் பார்த்தேன்
பிடித்தது என்றேன்
கொடுப்பினிற் சிரித்தார்
கொடுப்பதைக் கதைத்தார்

எதுவுமே வேண்டாம்
எல்லாமே பெடியனுடன்
வெளிநாடு செல்கின்ற
வெளிச்செலவை ஏற்றிடுக !

காணியை விற்று
கடனதைப் பட்டு
முப்பது லட்சம்
முடிவது ஆகிட

கட்டியே முடித்தோம்
காசுகள் தன்னை !
தொட்டுமே தாலி
கட்டினார் மணமகன்

ஓரிரு மாதங்கள்
ஒழுங்கு தவறிடா
ஒப்பற்ற உறவாய்
ஒன்றென வாழ்ந்தோம்

நாளும் வந்தது
நல்ல கணவனோ
வெளிநாடு சென்றார்
வெறிச்சோடிப் போனேன்

இலண்டனில் இருந்து
இலங்கை வந்தாலும்
இந்தமண் பிறந்தவன்
என்னவனை நம்பினேன்

நாளொரு மேனி
பொழுதொரு வண்ணம்
நாடிடும் தொலைபேசி
நல்லதோர் முகப்பேசி

கனவுகள் கோடி
கற்பனை கோடி
கண்களில் சுமந்து
காதலில் மிதந்து

என்மனம் தன்னில்
ஆறுதல் கொண்டு
எண்ணினேன் நாட்களை
ஓராண்டு ஆச்சு

இடியது ஒன்று
இறங்கியது போல
கொடிய அச்செய்தி
கொன்றது என்னை

பண்பாளனாய் எண்ணிய
என்னவருக்கு அங்கே
மனையாள் ஒருத்தியுடன்
மழலைகள் இருவராம் !

சிலையாகிப் போனேன்
சிந்தை கலங்கினேன்
விலையாகிப் போனதால்
வேதனையில் வாடினேன்?

முப்பது லட்சம் இல்லை
முழுமையாய் மானம் போச்சு
அரவணைத்த அப்பாவின்
ஆருயிரோ தூக்கில் போச்சு

நம்பிய உடன்பிறப்பை
நடுத்தெரு விடுவதோ - என்று
வெம்பியும் வாழுகின்றேன்
வேதனைத் தீயின் மீது

அன்புடை சோதரரே
அனுபவம் சொல்லுகிறேன்
திருமணம் செய்யும் வேளை
சடுதியாய் முடிவு வேண்டாம்

வெளிநாட்டு மோகம் கொண்டு
வேதனை தேடவேண்டாம்
உள்நாட்டில் உயர்ந்தவர்கள்
உள்ளனரே மறக்க வேண்டாம்.

# வந்து பார் . . .!

பாட்டெழுதிப் பரிசு பெறும்
புலவருள்ளார் - அவர்தம்
ஏட்டினிலே தவறு சுட்டிப்
பரிசுபெறும் தகையோரும்
தரணியிலே தனித்துவமாய்
தமது வழி தொடருகின்றார்

பாதையிலே முள்ளிருந்தால்
பார்த்துவிட்டுச் சென்றிடுவார்
பார்த்தொருவன் எடுத்தெறிந்தால்
பல கதைகள் பேசிடுவார்

காற்றடிக்கும் திசையெல்லாம்
கழன்று வழிமொழிவார்
நேற்றிருந்த கொள்கையிலே
நிலையாக இன்றிருக்கார்

வெட்டை வெளியில் நின்று
விரல் வித்தை பேசாமல்
உள்ளகத்தில் வந்து
உருண்டு பார் - அப்பொழுது

கடமையின் துன்பம்
காரியத் தடைகள்
எவையெவை உள்ளதோ
அவையெல்லாம் புரியும்.

# ஏக்கப் பெருமூச்சு

ஐயா பெரியதுரை
அன்றொருநாள் வந்தார்
மெய்யாய் உங்களுக்கோர்
விளையாட்டு மைதானம்

கையோடு தருகிறேன்
சுடுகாட்டின் அருகினிலே
பற்றை அழித்துமே
பாங்குடன் திருத்துக!

என்று செப்பியே
வென்று திரும்பினார்
இலவம் பழத்தினை
கிளியது காத்தாற் போல்

நாங்களும் நாளும்
காவல் இருக்கவே!
ஓர் நாளில் வந்தார்
ஒரு சில பேருடன்

சீராக அளந்தார்
கணித்தார் குறித்தார்
ஓரிரு வாரத்தில்
உறுதி வருமடா

உரைத்துமே சென்றார்
உண்மையில் மகிழ்ந்தோம்
இன்று நாளையென
இரண்டு மாதங்கள்

உருண்டு ஓடின
"உறுதி" வரவில்லை
என்ன ஏதென்று
ஏக்கம் தன்னுடன்

கழகச் செயலாளர்
கைத்தொலை பேசியில்
பணிவாய் பேசிட
பாய்ந்தார் பெரியதுரை

"யார் சொன்னார் உங்களுக்கு
உடைமை அந்தக் காணியெண்டு?
விளையாடத் தகைமையுண்டு
உறுதிபெற உரிமையில்லை"

தளராமல் பொய்யுரைத்தார்
தன்மானத் தலையாளி
பொறுமையாய் மனம்நொந்து
வீடு வந்தார் செயலாளர்!

அட மகனே! அடுத்தமுறை

தேர்தல் வரும் அன்றொருக்கால்

விடு விடு என எம்படலை

நீ திறக்க வந்திடாதே!

கொடியதொரு அரசியலில்

கொடுமையது செய்யாதே!

நடுவழியில் வீடுசெல்வாய்

பதவிதனில் தடம்புரள்வாய்!

மக்களைப் பகைத்தவன்

மன்னராக முடியாது

சொற்களால் சுட்டவன்

சொந்தமாக முடியாது!

உன்னைவிட இன்னொருவன்

உரிமையுடன் வந்திடுவான்

கையில் எல்லாம் தந்திடுவான்

கடமையுடன் தோள்கொடுப்போம்!

## உபதேசம்

"மாமிசம் தவிர்" என்று
மேடையில் முழங்கும்
சொற்பொழிவு மேதைகளுக்கு
தன் வீட்டு குப்பபைகளுடன்
முட்டைக்கோதுகளும்
மீன் முட்களும்
இருப்பது தெரிவதில்லை!

விசுவாசமற்ற
மதக் கோட்பாடுகள்
வீதிக்கு வந்ததாலே ...!
மதங்களுக்கு
"மதம்"
பிடித்துவிட்டது!

மனிதன் மனிதனாக
வாழாதவரை ...
மதங்கள் மட்டுமல்ல
மனிதமும் வாழாது !

## மனமே தளராதே . . .

மனம் ...
ஆழமாக
அசைக்க முடியாத
உறுதியோடு
இருந்தால்
உலகம்
உன் பின்னால்
உழன்று கொண்டிருக்கும் !

மன்னவன் கட்டிய
மாபெரும் கோயில்
பூசலார் கட்டிய
புனிதமான
மனக்கோயில் முன்
மண்டியிட்டதை
வரலாறு சொல்கிறது !

உறுதியான மனத்தின்
எண்ணங்கள்
வலிமையானவை !

நினைப்பது நடக்கும்
சொல்வது நடக்கும்
நீ ...
நீயாக இருந்தால் !

அலைகடலில்
நெடுவானில்
பயணம் செய்பவர்கள்
நெஞ்சம் நடுங்கினால்
சாதனை நடக்காது

நிலவைப் பார்த்து
பயந்து போயிருந்தால்
"ஆம்ஸ்ட்ரோங்"
என்ற பெயர்
அடுத்த வீட்டுக்கு கூட
தெரிந்திருக்காது !

கால மாற்றங்கள்
வந்து போனாலும்
உறுதி குலையாதவன்
உயரத்தில் எப்போதும் நிற்பான் !



# சிகரம் தொடு

உன்னைப் பற்றிய
விமர்சனங்கள்
உன்னை
சமுதாயத்தில்
பிரபலமாக்கும்
அதனால்...
எவர் எதைச் சொன்னாலும்
உன் மனதில்
தடுமாற்றம் வேண்டாம்!
மாற்றம்
வேண்டுமெனில்
மனதிலே உறுதி வேண்டும்
பாதையும்
பயணமும்
நன்றாக இருந்தால்
இமயத்தின் சிகரம் கூட
உன்
காலடியில்தான்...!
வாழ்க்கை
வசந்தம் ஆகிட
ஓடிக்கொண்டே இரு!

## முரண்பாடுகள்

கொள்ளிவைக்கப் பிறந்தமகன்
முள்ளிவாய்க்காலில்
மூச்சிழந்து போனான் !
அவனை ...
அள்ளிச் சென்று
ஆயுதம் கொடுத்தவன்
அந்நிய நாட்டில்
ஆடம்பரமாய்
வாழ்கின்றான் !
இதுதான்
உரிமைப்போர் !
மனிதம்
மரணித்தபின்
பிணங்களுக்கு மேல்
நின்று
"பிடில்" வாசிப்பதா?
உணர்ந்து கொள்வோம்
ஆயுதங்களுக்கு
ஓய்வுகள் கொடுத்து
அமைதியான
தேசத்தை
உருவாக்குவோம் !

# சூரியன்

மரியாதை
அது
கேட்டுக் கிடைப்பதில்லை !
தரம் பார்த்து
குணம் பார்த்து
தானாய் கிடைப்பது !

உன்னை
புரிந்து கொள்ளாதவர்
நிறைந்த சபையில்
நீ ...
கோமாளிதான் !
பொறுமையாய் இரு
மௌனமாக இரு
உறுதியான மனதோடு
உண்மையாய் இரு !

காற்றும் திசை மாறும்
அப்பொழுது
நிச்சயம்
நீதான் சூரியன் !

உலகிற்கே
ஒரு நாள்
ஒளி கொடுப்பாய் !

## சுவடுகள்

கடந்து வந்த பாதையிலே
கல்லும் முள்ளும்
இருந்ததை...
மறந்து விடாதே!
இன்று...
கோபுரத்தில் இருந்தாலும்
உன்னை வளர்த்தது
குடிசையும்
குப்பி விளக்கும் தான் !
வேப்பம் குச்சியால்
பல் துலக்கி
முகம் கழுவாமல்
தேனீர் குடித்ததை
நினைத்துப்பார்...!
அதன் சுகம் விளங்கும்
அவித்த மரவள்ளிக்கிழங்கும்
அம்மியில் அரைத்த சம்பலும்
பொரித்த கருவாடும்
கூட்டணி சேர்ந்துவிட்டால்
"ஹோட்டல்" எல்லாம்
எங்களிடம்
பிச்சை வாங்கும் !

நண்பா...

நினைத்துப்பார்!

போன காலங்கள்

திரும்பி வந்திடாது

இருந்த இடத்தை


பிறந்த ஊரை

என்றும்...

நினைவில் கொள்

உன்னை அசைக்க

இந்த உலகில் ஆளில்லை!



# வானம் வசப்படும்

உன்னை
எவர் புரிந்து கொள்ளாவிட்டாலும்
உனது பாதையில்
உண்மையாக நட !

காலம் கடந்தேனும்
உன்னை ஒருநாள்
உலகம் புரிந்து கொள்ளும் !

நெஞ்சு நிமிர்த்தி நிற்கும்
உனக்கு முன்னால்
வஞ்சித்த உலகம்
வலிமையிழந்து
தலை கவிழ்ந்து கொள்ளும் !

வாழப் பிறந்தவன் நீ !
உன்
வாழ்க்கையும்
ஒரு
வரலாறாய் ஆகும் !
உன் பாதையில்
ஓடிக்கொண்டிரு !
ஒரு நாள் ...
வானம் வசப்படும் !

# சாதனைப் பயணம்

தோல்விகள் கண்டு
துவண்டு போனாயோ?
நீ ...
மெருகூட்டப்பட்டுள்ளாய்
என்று ...
சந்தோசம் கொள் !

கனவுகள் சாதனைகள் ஆகலாம்
சாதனைகள்
கனவுகள் ஆகிவிடக்கூடாது.

தோல்வியை நினைத்து
நியூட்டன்
துவண்டு போயிருந்தால்
இந்த உலகம்
இருண்டு போயிருக்கும் !
இழப்புக்கள்
தோல்விகள்
என்பதெல்லாம்
உன்னை
உனக்கு உணர்த்தும்
உண்மையான நண்பர்கள் !

முயற்சிகள் தொடரட்டும்
முடிவுகள்
நல்லதாக அமையும்!
காற்று
உன் பக்கம் வீசும் !

# தமிழா

செருப்புக்கும் பூட்டுப்போட்டு
நிற்கும் தமிழா - உன்
இருப்புக்கே பூட்டுப்போட
முயற்சிகள் நடக்குதடா
பருப்புக்கும் பாணுக்கும்
காத்திருக்க வைத்துவிட்டு
விருப்பு வாக்குக்காய்
வீடு வருவார்
காட்டு செருப்பை!

# உறவுகள்

சொத்துக்கள் கொள்ளையிட( ச் )

சொந்தங்கள் பலவுண்டு !

சோதனையிற் தோள்கொடுக்க

சோதரராய் யாருமில்லை !

கையிருப்பு உள்ளதென்றால்

கடையோரும் நல்லோரே !

இல்லாதான் இல்லத்தை

"ஈ" கூட நெருங்காதே !

# புலராத பொழுதுகள்

இருபத்தோராம் நூற்றாண்டு
புலர்கின்ற வேளையிலும்
இருளுக்குள் என் வாழ்வு!
என் வாழ்க்கையின்
வரலாற்றுச் சுவடிகள்
கண்ணீரால் எழுதப்படுகின்றன!
மீண்டும் மீண்டும்
என் பாதையில்
முள் வேலிகளின்
முரட்டு அணிவகுப்புக்கள்!
விடியும் விடியுமென்று
விழிதிறந்து காத்திருந்தேன்...
காலங்கள் போகின்றன
காலைமட்டும் விடியவில்லை!
இந்தநிலை ஏனோ?
இறைவா...!
நாடகத்தை நடாத்து
நடிகன் நான்
முடிவுவரை பங்கேற்கிறேன்!

# சொல்லின் பொருள்

தாய் என்று சொல்
அன்பு பெருகும்
தமிழ் என்று சொல்
பண்பு வளரும்

நிலம் என்று சொல்
பொறுமை புரியும்
மலர் என்று சொல்
வாசனை தெரியும்

கடல் என்று சொல்
விசாலம் விளங்கும்
வானவில் என்றுசொல்
வர்ணங்கள் தென்படும்!

புலமை என்று சொல்
திறமை வெளிப்படும்
வறுமை என்று சொல்
வாழ்க்கையே வெறுக்கும்?

# தாயே தெய்வம்



ஏட்டில் படித்தாலும்
எழுத்தில் வடித்தாலும்
பாட்டில் பலரசனை
பாடித் துதித்தாலும்
கண்முன்னே கடவுள்
காட்சி தந்திடார்
கால் தடுக்கி ஒருகணம்
கீழ் விழுகையில் நீயும்
அம்மா! என்றழைத்துப்பார்
அருகினிலே தெய்வம் வரும்
அதுதான் தாய்ப்பாசம்
அதற்கு நிகர் வேறுண்டோ?

# என் நிலை

அன்பென்ற சரத்தினிலே
ஆரமாய் அணி சேர்க்கும்
இனியவென் சோதரியே ...!
ஈரேழு ஜென்மங்களும்
உன்னுடனே நானுதித்து
ஊணுண்டு உவகையுற
என்ன தவம் நான்புரிய?
ஏங்குகின்றான் உடன் பிறந்தோன் !
ஐக்கியமாய் நாம் வாழ
ஒரு பொழுது வந்துதிக்க
ஓங்கார விநாயகர்
ஔடதமாய் காத்தருள்வார்
எஃகுபோல் காத்திருப்பேன் !.

# விரைந்து வரும்

நெருப்பு என்று சொன்னால் - வாய்
வெந்துவிடாது
பருப்பு என்று சொன்னால் - பசி
தீர்ந்துவிடாது
கறுப்பு என்று சொன்னால் - நிறம்
ஒட்டிவிடாது
செருப்பு என்று சொன்னால் - கன்னம்
வீங்கிவிடாது
விருப்பு கொண்டு செயலாற்று - எல்லாம்
விரைந்து வரும் உன்னிடம்

# அழுகை

சப்பாத்துக்கு அழுகின்றான்

பணக்காரனின் மகன் !

சாப்பாட்டுக்கு

அழுகின்றான்

ஏழையின் மகன்

யுத்தம்

பறித்தது போக

மீதியாய்

இருக்கும்

ஒரு காலோடு !

# பெண்களே கண்கள்

உனக்கு
உருவம் கொடுத்த
அம்மாவும் ஒரு பெண்தான்
உனக்கு ...
பருவம் வந்ததும்
பக்கத்தில் துணையாக வந்த
மனைவியும் ஒரு பெண்தான்
கருவில்
நாளை பிறக்கவுள்ள
பெண் சிசுவை
அழிக்க நினைக்கும்
அரக்க மனம் கொண்டோரே !
முதலில் ...
உங்கள் தாயை
உங்கள் மனைவியை
கொல்லுங்கள் !
பின்பு
பெண் சிசுவைக் கொல்லலாம் !

# துயரங்களைக் கடந்து

அழகான
குருவிக்கூடாய்
எம் வீடு
அதில்
பாசப் பறவைகளாய்
நாங்கள் ...
பொல்லாத விதி
தந்தையை
விந்தையாய்ப் பறித்திட
வறுமைத் தடாகத்தில்
நீச்சலடித்தோம் !

என் தாய்
தெய்வத்தின் மறு உருவம் !
சோகத்திலும் தளராத
தற்துணிவு கொண்டு

கல் சுமந்தாள்
மண் சுமந்தாள்
தோட்டத்தில் வேலை செய்து
எங்கள்
வாட்டத்தைப் போக்கினாள்

பிள்ளைகளின் எதிர்காலம்
பிரகாசிக்க வேண்டும்
என்று
நெருப்புக் குளித்தாள்

வறுமை தெரியாமல்
வளர்த்தோம்
படித்தோம்
சாதனைகள் படைத்தோம் !

உடன் பிறப்புக்கள்
எல்லோரும்
இன்று
எட்டாத உயரங்களில் ...
நினைத்துப் பார்க்கின்றேன்
நெஞ்சம் குளிர்கிறது
வளர்ச்சிக்கு
வறுமை தடையல்ல !
என்பது
தெளிவாய்த் தெரிகிறது

இல்லை என்பதையும்
இயலாது என்பதையும்
தூரப் போடுங்கள்
சாதனைப் பயணங்கள்
வெற்றி பெறும் !

# வாழ்த்தியல் வரிகள்

## திருமண வாழ்த்து

இறைவனின் இணைப்பில்
திருமண முடிச்சில்
இணைந்திடும் இனிய
இதயங்கள் இரண்டும்
உலகியல் நிலையில்
தலையினும் சிறந்த
இல்லறம் புகுந்து
நல்லறம் காத்திட
இனிய நன் நாளில்
இதய நல் வாழ்த்து !

# பிறந்தநாள் வாழ்த்து

நட்பெனுஞ் சொல்லின்
நயத்தை நான் உணர
இத்தரை மீதினில்
உற்றதோர் நண்பனே !.

இப்புவி தன்னில் - நீ
உதித்தநற் பொழுதை
நினைவினில் மீட்டும்
நல்லதோர் நாளில்

ஈரெட்டுச் செல்வங்கள்
உனைவந்து சேரட்டும்
திக்கெட்டும் உன்நாமம்
தேனாக ஒலிக்கட்டும் !.

# என் பொங்கல்

புத்தாடை தானுடுத்து( ப் )
புத்தரிசி பொங்கலிட்டு
பழவகைகள் கரும்புகளை
புசித்திருப்பீர் நீங்களெல்லாம் !

அன்றுடுத்த ஆடையுடன்
ஆசைகளைத் தான்புதைத்து
ஏழைமகன் போலநானும்
ஏங்குகிறேன் இக்கூட்டில் !

உங்களுடன் நானிணைந்து
உவகையுறல் எந்நாளோ?
அந்நாளே எந்தனுக்கு
நன்னாளாம் பொங்கல் நாள் !



# நண்பா வாழ்க

தாய் வீடு தனைவிட்டு
தணிக்கூடு தேடியினி
வாழ்வென்னும் பாதையிலே
வழித்தடம் பதிக்கவென
காலமது காத்திருக்கும்
கனியவனே என்நண்பா !

கண்ணிறைந்த பைங்கிளியை
கைப்பிடித்து மகிழ்வுடனே
தக்கதொரு தம்பதியாய்
தாரணியில் வாழ்கவென
புத்தகவை காணுகையில்
பொலிவுடனே வாழ்த்துகிறேன் !.

# நத்தார் வாழ்த்து

அன்னை மரியாளின்
　　அருந்தவப் புதல்வனாய்
மார்கழித் திங்களில்
　　மாட்டுத் தொழுவத்தில்
மாண்புடனே உதித்தவராம்
　　மனங்களிலே நிறைந்தவராம்
கல்லறையை வென்றமகன்
　　கர்த்தரெங்கள் இயேசுபிரான்
பூவுலகில் உதித்தநாள்
　　புண்ணியநாள் கிறிஸ்மஸ்நாள்
இந்நாளில் இனிதுவாழ
　　அன்புடனே வாழ்த்துகிறேன் !

# விரைந்தருள் தந்திடுவீர்

மார்கழித் திங்கள் கடுங்குளிர் வேளை
மன்னவன் பிறந்தாரே - சுழல்
பூமியில் வாழும் உயிர்களை மீட்க
புண்ணியன் உதித்தாரே !

கெடுமதி தண்ணில் சிக்கிய மாந்தர்
விடுபட வழியுரைத்தார் - கேடு
கெட்டவன் யூதாஸ் செய்தவஞ் சனையால்
கர்த்தருங் கைதியானார் !

முள்முடி சூடியே முகத்தில் உமிழ்ந்தனர்
எள்ளி நகைத்தனரே - வல்ல
பொறுமையின் தேவன் உம்முடல் தன்னை
சிலுவையில் அறைந்தனரே ...!

உத்தமரெங்கள் கிறிஸ்துவே தேவா
உம்மையே வேண்டுகின்றோம் - எங்கள்
விடுதலை நாளை விரைவில் காண
விரைந்தருள் தந்திடுவீர்!

# நறுக்கியல் வரிகள்

## கவிதை


நிழலும் நிஜமும்
நிறைந்த
உயிரோவியம் !

## பணம்

செல்வந்தர்களின்
நண்பன்
ஏழைகளின்
பரம எதிரி !

## ஆபத்து

நண்பனின் விரோதம்
எதிரியின்
நட்பு !



## மீசை

வாய் என்ற வாய்க்காலின்
விளிம்பினில் உள்ள
கோரைப்புற் கூட்டம் !

## ஆயுதம்

உனது,
எதிரியை அச்சுறுத்தும்
வலுவான ஆயுதங்கள்
உன்
மௌனமும்
பொறுமையும்!



## பொறாமை

சிறகடிக்கும் பறவைகளில்
எனக்குப் பொறாமை!
ஏனெனில்
அவற்றின் இதயங்களில்
சோகத்தின் வடுக்கள்
இல்லை!

## தயங்காதே!

நண்பா!
தோல்வி என்று
எதனையும் எண்ணாதே,
அவை,
சாதாரண பின்னடைவுகள்
வெற்றிக் கொடிகளைத் தாங்கிடும்
கொடிக்கம்பங்கள்

## என் உறவுகள்

வேதனை வெளித் தெரியாமல்
உதட்டினில் சிரிப்புடன்
உள்ளத்தில் அழுகின்றவர்களே !
நீங்கள்
என் உறவினர்கள் !
ஏனெனில்
நானும்
உங்களில் ஒருவனே !

## மறக்காதே

கடந்தகால வாழ்வின்
நிகழ்வுகளை
மறந்து விடாதே !
அவை
உன் எதிர்கால வாழ்வின்
வழிகாட்டிகள் !

## நிஜம்

எதைப்பற்றி
தினமும் நினைக்கின்றீர்களோ ...
அது
என்றோ ஒருநாள்
உண்மை நிகழ்வு ஆகும் !

## விடியல்

துரோகப் புழுதிகள்
உயரக் கிளம்பினாலும்
எழுகின்ற கதிரவன்
மறைக்கப்படுவதில்லை !




## இயலாமை

கொண்டை சரியில்லை
இது என்ன ஸ்ரைல்?
நண்பனை விளித்து
முகத்தைச் சுழிக்கிறான்
மொட்டைத்தலையன் !

## தடுமாறாதே !

நீ ....
நீயாக இருக்கும் வரை
நெருப்புக் கூட
உன்னை
நெருங்காது !



# என்னையும் ஏற்றிடுக !

பட்டினத்தார் கெட்ட வார்த்தை
சுட்டினாலும் கவி என்பார்
பாவுரைக்க நான் வந்தால்
பகிடியுடன் பார்த்திடுவார்

பிரபல்யம் பெற்றுவிட்ட
பிரபஞ்சக் கவிஞர்கள்
தும்மினாலும் இருமினாலும்
தமிழாகும் கவியாகும்

தரமான எவர் படைப்பும்
மொழியாகும் உயிராகும்
உரமாக நினைத்து விட்டால்
வரமாகும் வளமாகும்

தட்டிக் கொடுத்துவிடத்
தரணியிலே சிலர் இருந்தால்
எட்டிப் பிடித்திடலாம்
வானத்துச் சூரியனை !

## யாருமற்ற தீவினிலே - வயவையூர் கை. சீதாராமன்



யாழ் எழுதுகோலாகி மீட்டியிருக்கின்றது
கவிதை இசை
சீதாராமனின் ஆறாம் விரல் யாருமற்ற தீவாகிவிட
அதில் உதித்திருக்கின்றன
நிலா சூரியன்.
வைரத்தமிழ் விளைந்திருக்கின்றது
அகர மண்ணில்.
கலை இலக்கியப் பரம்பரையில்
கவிதைப் படகு ஓடவிட்டிருக்கிறது ஒரு முத்து
காதல் படைத்திருக்கிறது புல்லாங்குழல்
அமுத இசையாகி வடிகிறது உயிர்
முற்போக்கு பிற்போக்கு வரம்புகள் இடித்து
செய்திருக்கிறது சமூகவயல்
இதயங்கள் சிறகுகள் ஆகின்றபோது
இந்த யாருமற்ற தீவு நிறைகிறது வாசக நெஞ்சங்கள்
இது கண்களை மலர்களாக்கும் தோட்டம்
மொழிக்கு ஒளி பாய்ச்சும் வண்ணக்கதிர்
தமிழ் மொழியில் ஒரு வண்ணத்துப் பூச்சியின்
அழகிய புதிய பயணம் இது
இந்தச் சொற்களில் நிச்சயம் கிடைக்கும்
கற்கண்டு சுவை
தீக்குச்சிகள் ஏராளம் இந்தச் சமூகப் பார்வையில்
அனுபவச் சுவட்டில் நடந்து வந்திருக்கிறது
இவனது எழுதுகோல் பாதம்
இந்தக் கவிதையின் வாசல்கள் தோறும்
மலர்ச் செடிகளாய் காதல்
இந்த வானநதியில் இதயங்கள் விழுந்தால்
அவை ஆகும் விண்மீன்களாக
யாருமற்ற தீவினிலே சீதாராமன் என்றும்
குடியிருக்கிறான் மொழி இல்லம் அமைத்து
என் வாழ்த்துக் கைதட்டல்கள்.

- ராஜகவி ராகில்
11.08.2014

Guru Printers